

நெல்லை தூத்துக்குடி மாவட்டங்களில் பெய்த வரலாறு காணாத பெருமழையால், தாமிரபரணி ஆற்றில் பெரும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதை தொடர்ந்து, தூத்துக்குடி மாவட்டத்தில் தாமிரபரணி கரையோரம் உள்ள கீழமங்களக்குறிச்சி கிராமத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாடடுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆய்வு செய்து கடும் வெள்ளப்பெருக்கால், சேதமடைந்த வீடுகள் வாழைத்தோட்டங்கள் பேருந்து நிறுத்தம் குடியிருப்புப் பகுதிகளை நேரில் பார்வையிட்டு, பொதுமக்களின் கோரிக்கைகளை கேட்டறிந்தார். உடன் அமைச்சர் பி.மூர்த்தி, அரசு அதிகாரிகள், கழக நிர்வாகிகள் உள்ளனர்.

# #OurTax_OurRights.. பேரிடர் நிவாரணமாக ஒன்றிய அரசிடம் கூடுதல் நிதி கோரும் தமிழ்நாடு!

## X பதிவில் ட்ரெண்டிங்!

டெல்லி, டிச. 23-

எங்கள் வரிப் பணம் எங்கள் உரிமை என ஒன்றிய அரசிடம் தமிழ்நாடு மக்கள் கேள்வி கேட்டு வருகிறார்கள். மிக்ஜாம் புயல் கனமழையால் சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் ஏற்பட்ட பாதிப்பில் இருந்து மீள்வதற்குள் அடுத்த ஒரு வாரத்திலேயே திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, தென்காசி மாவட்டங்களில் வரலாறு காணாத கனமழை கொட்டித் தீர்த்தது.ஒரே ஆண்டில் பெய்ய வேண்டிய மழை ஒரே நாளில் பெய்ததால் மக்களின் வாழ்வாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இதனிடையே மிக்ஜாம் புயல் கனமழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரூ.6000 நிவாரண நிதி வழங்கப்பட்டு வரும் நிலையில், தூத்துக்குடி, நெல்லையில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் ரூ.6000 வழங்கப்படும் என்றும் குமரி, தென்காசி மாவட்ட மக்களுக்கு ரூ.1000 வழங்கப்படும் என்றும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார்.

இந்த நிலையில், நேற்று செய்தியாளர் கேள்விக்கு பதில் அளித்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், “தேசிய பேரிடர் நிவாரண நிதியில் இருந்து தமிழ்நாட்டிற்குக் கூடுதல் நிதி வழங்கப்படவில்லை. தற்போது ஒன்றிய அரசு அளித்த ரூ.450 கோடி, மாநில பேரிடர் நிவாரண நிதிக்கு வழக்கமாக வழங்க வேண்டிய 2வது தவணையே தவிர, கூடுதல் நிதி அல்ல. தமிழ்நாடு அரசின் நிதியை செலவிட்டு மக்களுக்கு நிவாரணம்




வழங்கப்பட்டு வருகிறது,”இவ்வாறு விளக்கம் அளித்தார்.ஒரு இயற்கைப் பேரிடரின் தாக்கம் மிகக் கடுமையாக இருக்கும்போது இந்த SDRF நிதி போதவில்லை என்றால், அந்த இயற்கைப் பேரிடரைக் கடும் இயற்கை பேரிடராக அறிவித்து தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து (NDRF) கூடுதல் நிதி ஒதுக்கப்படும்.

ஆனால் இதுவரை இரண்டு பேரிடர்களும் கடும் பேரிடர்களாக அறிவிக்கப்படவில்லை. NDRF-ல் இருந்தும் தமிழ்நாட்டிற்கு கூடுதல் நிதி எதுவும் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. இந்த நிலையில், ஒன்றிய அரசின் NDRFல் இருந்து கூடுதல் நிதி ஒதுக்கீட வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் பலமுறை கோரிக்கை வைத்தும் நிதியளிக்காத ஒன்றிய பாஜக அரசை கண்டித்து தமிழ்நாட்டு மக்கள் #OurTax_OurRights என்ற ஹேஷ்டேக்கில் மோடி அரசுக்கு எதிராக தங்களது கண்டனத்தை x பதிவு - சமூகவலைதளத்தில் செய்து வருகின்றனர்.

### மழை, வெள்ளம் பாதித்த

# தென் மாவட்டங்களில் மீட்புப் பணி நிறைவு!

## தலைமை செயலாளர் ஷிவ்தாஸ் மீனா பேட்டி!

சென்னை,டிச.23-

மழை, வெள்ளம் பாதித்த தென் மாவட்டங்களில் மீட்புப் பணி நிறைவடைந்துள்ளது என தலைமை செயலாளர் ஷிவ்தாஸ் மீனா தெரிவித்துள்ளார். இது தொடர்பாக செய்தியாளர்களை சந்தித்து பேசிய தலைமை செயலாளர் ஷிவ்தாஸ் மீனா; மழை, வெள்ளம் பாதித்த தென் மாவட்டங்களில் மீட்புப் பணி நிறைவடைந்துள்ளது. தென் மாவட்டங்களில் பால் விநியோகம் சீரானது. வெள்ளம் பாதித்த பகுதிகளில் இருந்து 49,707 பேர் மீட்கப்பட்டுள்ளனர். மீட்பு பணிகளில் 1700 காவலர்கள் மற்றும் பேரிடர் மீட்பு பணியில் பயிற்சி பெற்ற வீரர்கள் பங்கேற்றுள்ளனர்.

மழை, வெள்ளம் பாதித்த பகுதிகளில் மீட்பு பணிகளில் 324 படகுகள் பயன்படுத்தப்பட்டது. மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு இதுவரை 35 பேர் உயிரிழந்துள்ளர். பாதிக்கப்பட்ட இடங்களில் சமுதாய சமையல் கூடங்கள் மூலம் உணவு தயாரித்து வழங்குகிறோம். பாதிக்கப்பட்டவர்களுக்கு இதுவரை 5 லட்சம் உணவு பொட்டலங்கள் வினியோகம் செய்யப்பட்டுள்ளன. தூத்துக்குடி மாவட்டத்தில் டேங்கர் லாரிகள் மூலம் குடிநீர் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. ஹெலிகாப்டர் மூலம் 81 மெட்ரிக் டன் உணவு பொருட்கள் வினியோகம் செய்யப்பட்டது. 249 லாரிகள் மூலம் 1200 மெட்ரிக் டன் உணவு பொருட்கள் வினியோகம் செய்யப்பட்டது.

குமரி, தென்காசி மாவட்டங்களில் உள்ள நியாய விலைக்கடைகள் 95% செயல்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. கூடுதலாக பொறியாளர்கள், பணியாளர்கள் வரவழைக்கப்பட்டு சாலை சீரமைப்பு பணிகள் நடைபெற்று வருகிறது. மழை, வெள்ளத்தால் 152 சாலைகள் தண்ணீரில் மூழ்கி இருந்த நிலையில் தற்போது 117 சாலைகள் சீரமைக்கப்பட்டு விட்டது. மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 4 மாவட்டங்களில் 3,700 குடிசைகள் சேதம் அடைந்துள்ளன. மழை, வெள்ளத்தால் கூட்டு குடிநீர் திட்டங்கள் பாதிப்பு; சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது இவ்வாறு கூறினார்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன். நேற்று (22.12.2023) தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ஆய்வு மேற்கொண்டார். இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.செல்வவிநாயகம், மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.சங்குமணி, தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு.சிவகுமார் மற்றும் உயர் அலுவலர்கள் உடன் இருந்தனர்.



தூத்துக்குடி மாவட்டம் ஏரல் பேரூராட்சியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரிசி, மளிகை பொருட்கள், பாய், போர்வை உள்ளிட்ட நிவாரண உதவிகளை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். உடன் அமைச்சர் பி.மூர்த்தி, அரசு அதிகாரிகள் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### தூத்துக்குடி மாவட்டத்தில்

# 50 இடங்களில் மெகா மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள்!

## ஆய்வுகளுக்குப்பின் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

தூத்துக்குடி, டிச.23-

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், நேற்று (22.12.2023) தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களை பார்வையிட்டு, அதனை உடனடியாக சரிசெய்யும் வகையில் மருத்துவ அலுவலர்களுடன் ஆலோசனை மேற்கொண்டு அறிவுறுத்தல்களை வழங்கினார். பின்னர் தூத்துக்குடி மாவட்டம், ஸ்மார்ட் சிட்டி பேருந்து நிறுத்தம், குறிஞ்சி நகர், பூந்தம்புலி, போடம்மாள்புரம், சுப்பிரமணியபுரம், ஏரல், ஆழ்வார் திருநகரி, திருவைகுண்டம் போன்ற பல்வேறு இடங்களில் நடைபெற்ற சிறப்பு மருத்துவ முகாம்களை பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது;

மிகப்பெரிய அளவிலான மழை பாதிப்புகளைத் தொடர்ந்து, முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் தென்காசி ஆகிய 4 மாவட்டங்களிலும், மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் நடமாடும் மருத்துவ குழுக்களின் சார்பில் தொடர்ச்சியாக முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றது. கடந்த 17.12.2023 முதல் தற்போது வரை 190 நடமாடும் மருத்துவக் குழுக்களின் வாயிலாக முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றது. ஒவ்வொரு வாகனத்திலும் மருத்துவர் உள்ளிட்ட 4 மருத்துவப் பணியாளர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கின்றனர். நாளொன்றுக்கு ஒவ்வொரு வாகனத்தின் மூலம் 3 அல்லது தேவைக்கேற்ப 4 இடங்களில் மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில் நேற்று இரவு வரை 2,082 இடங்களில் மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு முகாம்களின் மூலம் 100 பேர் மருத்துவப் பயன் பெற்று வருகின்றனர்.

இதில் அதிகபட்சமாக ஒரு முகாமில் 158 பேர் மருத்துவ பயன்பெற்றிருக்கின்றனர். இதுவரை நடத்தப்பட்ட மொத்த முகாம்களின் மூலம் 65,756 பேர் பயன்பெற்றுள்ளனர். 334 காய்ச்சல் பாதிப்புகள், 1341 இருமல், சளி பாதிப்புகள் முகாம்களின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. தூத்துக்குடி மாவட்டத்தில் மட்டுமே 48 மருத்துவ வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு வருகிறது. நேற்று முதலமைச்சர் அவர்கள் தூத்துக்குடி மாவட்டத்தில் ஆய்வு மேற்கொண்டு, புறநகர் பகுதிகளில் கூடுதல் முகாம்கள் நடத்த வேண்டும் என்று அறிவுறுத்தியிருக்கிறார். அந்த வகையில் இன்று தென்காசி, கன்னியாகுமரி ஆகிய இடங்களில் சகஜநிலை திரும்பியிருக்கின்ற காரணத்தினால், அங்கு பயன்படுத்தி வந்த வாகனங்களை தூத்துக்குடி மாவட்டத்தில் பயன்படுத்தும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் மதுரை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இருந்து, பயிற்சி மருத்துவர்கள் தூத்துக்குடி மாவட்டத்திற்கு வர வைக்கப்பட்டுள்ளனர்.

தூத்துக்குடி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகம் தாழ்வான பகுதியில் அமைந்துள்ள காரணத்தினால் மழை தொடங்கிய நாளன்று பெரிய அளவில் நீர் தேங்கியுள்ளது. இந்த தகவல் தெரிந்த உடனே துறையின் செயலாளர் அவர்கள், மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் அவர்களை தூத்துக்குடி மாவட்டத்திற்கு அனுப்பி வைத்தார்கள். அவர் உடனடியாக தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெறும் நோயாளிகள் பாதிக்காத வகையில் இந்தியன் ஆயில் கார்பரேசன் (IOC) நிர்வாகத்திடம் பேசி, டீசல் ஏற்பாடு செய்து மின் பாதிப்பு ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுத்துள்ளார். மேலும், மருத்துவக் கல்லூரி முதல்வர், நிலைய மருத்துவ அலுவலர், மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் மருத்துவ பணியாளர்கள் ஆகியோர் மிகச்சிறப்பாக செயல்பட்டு இந்த பேரிடரை கையாண்டுள்ளனர். குறிப்பாக தரைத் தளத்தில் இருந்து மருத்துவ சேவைகளை முதல் தளத்திற்கு மாற்றி, நோயாளிகளையும், மருத்துவ உபகரணங்களையும் பாதுகாத்துள்ளனர்.

கேத்லேப் போன்ற பெரிய உபகரணங்கள் உடனடியாக எடுத்துச்செல்ல முடியாத நிலை ஏற்பட்டதால், சேதம் அடைந்துள்ளது. துறையின் செயலாளர் அவர்கள் உடனடியாக அதனை பார்வையிட்டு, அவைகள் இயங்க செய்வதற்குரிய நடவடிக்கை எடுக்கும் விதமாக சென்னையில் உள்ள அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். மேலும், தாழ்வான பகுதிகளில் தேங்கியுள்ள மழை நீரை அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நோயாளிகள் மற்றும் அவர்களுடன் இருப்பவர்களுக்கு தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் முதல் தளத்தில் உணவு தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் தேங்கியுள்ள மழை நீரை மோட்டார்கள் கொண்டு அகற்றும் பணியினை பொது சுகாதாரத் துறையின் இயக்குநர் அவர்கள் ஆய்வு செய்து வருகிறார்.

மேலும், வருகின்ற ஞாயிற்றுக்கிழமை 24.12.2023 அன்று வேலம்மாள் மருத்துவமனை, அப்பல்லோ மருத்துவமனை, மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனை, வடமலையான் மருத்துவமனை ஆகிய 4 தனியார் மருத்துவமனைகள் இணைந்து 50 மெகா சிறப்பு மருத்துவ முகாம்களை தூத்துக்குடி மாவட்டத்தில் நடத்துகிறது, இதனை பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும், மேலே குறிப்பிட்ட 4 மாவட்டங்களில் பிரதான குடிநீர் இணைப்பு குழாய்கள் துண்டிக்கப்பட்டுள்ள காரணத்தினால், பொதுமக்கள் தாங்கள் பயன்படுத்தும் நீரை காய்ச்சி பருகினால், டைபாய்டு போன்ற நோய் பாதிப்புகளில் இருந்து பாதுகாத்துக் கொள்ள முடியும் என்று அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது, பொதுமக்கள் தவறாமல் இதனை பின்பற்ற வேண்டும்.

### கொரோனா பாதிப்பு

கடந்த 6 மாதங்களாக ஒற்றை இலக்கத்தில் இருந்த கொரோனா பாதிப்பு, தற்போது சிங்கப்பூரில் 4000 என்ற எண்ணிக்கையிலும், அண்டை மாநிலமான கேரளாவில் 300 என்ற எண்ணிக்கையிலும் பரவத் தொடங்கியுள்ளது. முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. சிங்கப்பூர் மருத்துவர்களுடன் துறையின் சார்பில் ஆலோசிக்கப்பட்டதில், பெரும்பாலானவர்களுக்கு இருமல் மற்றும் தொண்டை வலி போன்ற பாதிப்புகள் ஏற்படுகிறது, 3 நாட்களில் சரியாகிவிடுகிறது என்று தெரிவித்துள்ளார். தமிழ்நாட்டை பொறுத்தவரை நேற்றைக்கு 23 பேர் கொரோனாவினால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு உரிய சிகிச்சைகள் வழங்கப்பட்டு தற்போது நலமாக உள்ளனர். மேலும், கர்பிணித் தாய்மார்கள், வயது முதிர்ந்தவர்கள், இணை நோய் உள்ளவர்கள் பொது இடங்களுக்கு செல்லும் போது முகக்கவசங்கள் கட்டாயம் அணிந்து கொண்டு செல்ல வேண்டும்.

இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு. செல்வவிநாயகம், மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.சங்குமணி, தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு. சிவகுமார் மற்றும் உயர் அலுவலர்கள் உடன் இருந்தனர்.



திருவள்ளூர் மாவட்டம் ஆவடி மாநகராட்சி அனைத்து வணிகர்கள் சங்கம் கூட்டமைப்பு சார்பாக தென் மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள இயற்கை பேரிடர் மற்றும் பெரும் மழை காரணமாக பாதிப்படைந்த மக்களுக்கு 15 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் அரிசி மூட்டை மளிகை பொருட்கள் போர்வை உள்ளிட்ட பல்வேறு வெள்ள நிவாரண தொகுப்புகளை முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ ஆவடி மாநகராட்சி ஆணையர் ஷேக் அப்துல் ரகுமானியிடம் ஒப்படைத்தார். உடன் ஆவடி மாநகர மேயர் ஜி உதயகுமார், ஆவடி மாநகர பொறுப்பாளர் சன் பிரகாஷ் மண்டல குழு தலைவர் ஜி.ராஜேந்திரன், பகுதிச் செயலாளர் பொன்.விஜயன், மற்றும் கோ.சத்யா ரவி மற்றும் வியாபாரிகள் சங்க நிர்வாகிகள் மற்றும் அதிகாரிகள் கழக நிர்வாகிகள் உள்ளனர்.